DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.19/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | பழனிச்சாமி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பழனியாண்டி | சமயம் | - | |
| கிராமம் | - | தாய்முடி.என்சி. | வயது | - | 66/2026 |
| சாதி | - | | | | |

**<u>11-03-2026</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி பேச்சிமுத்துவை தெரியும். கடந்த 29-10-2024-ம் தேதி இரவு 07.30 மணியளவில் எனது பேரன் ஆகாஷ் வீட்டின் முன்பு விளையாடிக்கொண்டிருந்தான். அந்த பகுதியில் யானை வருவதால் என் பேரனை வீட்டிற்குள் வருமாறு சத்தம் போட்டு அழைத்தேன். அப்போது பேச்சிமுத்து என்னை பார்த்து நீ யாருடா பசங்களை அழைப்பது தேவிடியா மகனே என்று திட்டினார். உடனே எதிரி அருகில் இருந்த பிரம்பை எடுத்து எனது முதுகில் இருபுறமும் அடித்தார். அதில் எனக்கு முதுகில் தடுப்பு தடுப்பாக காயம் ஏற்பட்டது. எனது மனைவியையும் எதிரி அடித்துவிட்டார். எனது மனைவிக்கு முழங்கை, தலை மற்றும் நெற்றியில் காயம் ஏற்பட்டது. நானும் எனது மனைவியும் மறுநாள் காலை வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்து சேர்ந்தேன். நான் வால்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வால்பாறை காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். **(என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் மேல்சிகிச்சைக்காக என்னையும் என் மனைவியையும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். எதிரி என்னை அடித்த பிரம்பை பார்த்தால் அடையாளம் காட்டமுடியும் அதில் இரும்பு பிடி போட்டு இருக்கும் என்னிடம் காட்டப்படும் பிரம்பு எதிரி என்னை அடித்த பிரம்மாகும். **(அந்த பிரம்பு அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்குவிசாரணை இல்லை என்றார்.

<u>மறு விசாரணை </u>:இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.19/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | வீட்டுகுடித்தனம் |
| பெயர் | - | சந்திரா | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பழனிசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | தாய்முடி.என்சி. | வயது | - | 65/2026 |
| சாதி | - | | | | |

**<u>11-03-2026</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டுகுடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 பழனிச்சாமி எனது கணவராவார். எதிரி பேச்சிமுத்துவை தெரியும். சென்ற வருடம் தீபாவளிக்கு முதல் நாள் தேதி மாதம் நினைவில் இல்லை. மாலை 07.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது பேரன் ஆகாஷ் வீட்டிற்குவெளியே விளையாடிக்கொண்டிருந்தான். நான் எனது பேரனிடம் மிருகங்கள் நடமாட்டம் இருப்பதால் வீட்டிற்குள் வரும்மாறு கூறினேன். அதற்கு பேச்சிமுத்து என்னிடம் ஆகாஷ்சின் பெற்றோர்கள் ஆகைாசை என்னிடம் தான் விட்டுச்சென்றுள்ளார்கள். நீ ஏண்டீ தேவிடியா கூப்பிடுகிறாய் என்று சத்தம் போட்டார். அதற்கு நான் என் பேரனை நான் கூப்பிடாமல் வேற யாரு கூப்பிடுவாங்க என்று சொன்னேன். அதற்கு எதிரி என்னை தேவிடியா என்று திட்டி முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். அதற்கு என் கணவர் என்னிடம் நீ ஏன் அவனிடம் வாக்குவாதம் செய்கிறாய் என்றுவீட்டிற்குள் கூப்பிட்டார். எதிரி என் கணவரை குறல்வளையை பிடித்து கீழே தள்ளிவிட்டு அடி அடி என்று அடித்தார். பின்னர் பிரம்மாலும் அடித்தார். பேச்சிமுத்துவின் மகன் மதன் அடிக்காததப்பா என்று தடுத்தார். பின்னர் நாங்கள் முடீஸ் காவல்நிலையத்திறகு புறப்பட்டோம். அப்போது எதிரி பிரம்புடன் பின்தொடர்ந்து வந்து என்னையும் எனது வீட்டுக்காரரையும் அடி அடி என்று பிரம்பை வைத்து அடித்துவிட்டார். அதில் எனக்கு முழுங்கை, முழங்கால் தொடை முதுகு ஆகிய இடங்களில் வீக்கம் ஏற்பட்டு காயம் இருந்தது. எனது கணவருக்கு முதுகில் அடித்தால் முதுகில் வீக்கம் ஏற்பட்டு காயம் இருந்தது. பின்னர் அரசு மருத்துமனைக்கு போன் செய்துஆம்புலன்ஸ் மூலம் வால்பாறைஅரசு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். எதிரி அடித்த பிரம்பு என்னிடம் காட்டும் பிரம்புதானா என்று எனக்கு தெரியவில்லை. பதற்டத்தில் பிரம்பை சரியாக கவனிக்கவில்லை ஆனால் பிரம்பை கொண்டுதான்அடித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில்  வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்குவிசாரணைஇல்லை என்றார்.

<u>**மறு விசாரணை**</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.